# மதுவரிக் கட்டளைச் சட்டம்

## மதுவரி அறிவித்தல் இல: 1005

### குடிபானமல்லாத ஸ்பிரித்து இறக்குமதிக்கான மதுவரி

காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரி கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 32ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அதே சட்டத்தின் 2 ஆம், 12 ஆம், 22 ஆம் மற்றும் 25 ஆம் பிரிவுகளின் கீழ் எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், இக்கட்டளை மூலம் 2017 நவம்பர் மாதம் 09 ஆந் திகதிய 2044/33 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறித்தலில் வெளியிடப்பட்ட மதுவரி அறிவித்தல் இல. 999 இல் குறிப்பிடப்பட்ட ஒழுங்கு விதிகள், இங்கு பந்தி இல.05 இற்கு உடனடுத்து பின்வரும் பந்தியினை உட்புகுத்துவதன் மூலமும் மற்றும் பந்தி இல.06 ஆனது பந்தி இல. 07 ஆகவும் மீள் இலக்கமிடப்படுவதன் மூலம் திருத்தியமைக்கப்படுகிறது.

"06 இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கை செய்துகொண்டுள்ள ஏற்றுமதியினை அடிப்படையாகக் கொண்டுள்ள ஏதேனும உற்பத்தி நிறுவனம் ஒன்று 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 09 ஆந் திகதிய 2044/33 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறித்தலில் வெளியிடப்பட்ட மதுவரி அறிவித்தல் இல.999 இல் முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை மூலப்பொருட்களாகப் பயன்படுத்தி உற்பத்திசெய்யப்படுகின்ற மொத்த உற்பத்தியின் 80 சதவீதத்திற்கு குறையாத தொகை ஏற்றுமதிசெய்யப்படின், மற்றும் அத்தகைய ஏற்றுமதியானது இலங்கை முதலீட்டுச் சபைப் பணிப்பாளர் நாயகத்தினால் சான்றுபடுத்தப்படின், அத்தகைய மூலப்பொருட்கள் இறக்குமதியின் போதான மதுவரியானது மேற்குறித்த மதுவரி அறிவித்தல் இல.999 இல் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள செலுத்தப்பட வேண்டியுள்ள மதுவரியின் 10 சதவீதமாகும்".

மங்கள சமரவீர

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்

கொழும்பு -01

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

2017 திசெம்பர் மாதம் 19 ஆம் திகதி